சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அ.வ.எண். 313/2018

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சோன்ராஜ் | வயது | 25 |
| த/பெ | மோகன்தாஸ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | தாசம்பாளையம் ( மணி நகர்) | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | சொந்த தொழில் |

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** :

பி.வா.சா.ஆ.1 ல் அளவுகள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் அதில் புல எண்.B-31/181 என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. அந்த பட்டாவை பார்த்தால் அளவுகள் தெரியும். அந்த புல எண் முழுவதும் எங்களது அனுபவத்தில் உள்ளது. எங்களது அனுபவத்தில் உள்ளது என்று காட்ட ஆவணங்கள் ஏதாவது உள்ளதா என்றால் பி.வா.சா.ஆ.1 தான் அந்த ஆவணம். பி.வா.சா.ஆ.1 ஆனது 2017 ம் ஆண்டு வரை மட்டுமே உள்ளது என்றால் 2017 ம் ஆண்டு உடன் B மெமோ வழங்குவதை அரசு நிறுத்தி விட்டது. தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என தமிழ்நாடு அரசு மீது நீதி மன்றம் மூலமாக பட்டா வழங்க கோரி நடவடிக்கை ஏதாவது எடுத்துள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் தாவா சொத்தை முழுமையாக பயன்படுத்தாததால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரி அல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள இடம் தாவா சொத்து என்றால் சரி தான். அந்த புகை படங்களில் முழுவதும் செடிகள் முளைத்துள்ளன

என்றால் சரி தான். எனது அப்பா இறந்த பின்னர் நானும் எனது அம்மாவும் தாவா சொத்தை சுத்தம் செய்ய சென்ற போது வாதி தகராறு செய்தார். அதனால் தற்போது தாவா சொத்தை நாங்கள் பயன்படுத்தவில்லை என்றால் சரி தான். தாவா வண்டி பாதைக்கு அருகில் இருக்கும் எங்களது வீட்டின் கதவு எண்.40-D. அந்த வீட்டிற்கு வேறு பாதை வழியாகவும் செல்லலாம் என்றால் இல்லை. கதவு எண்.40-D என்ற வீட்டிற்கு தாவா பாதையை பயன்படுத்த முடியாமல் தடுக்கிறார்கள் என வாதிகள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்தோமா என்றால் 2020 ம் ஆண்டில் எனது அப்பா இறந்து விட்டதாலும், எனது அம்மாவிற்கு உடல் நிலை சரியில்லாததாலும் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. எனது அப்பா தாக்கல் செய்த அ.வ.எண்.237/2007 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராகவும் நாங்கள் மேல் முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் 2014 ம் ஆண்டில் எங்களது மொத்த குடும்பமும் ஒரு பெரிய சாலை விபத்தில் சிக்கி அனைவருக்கும் எலும்பு முறிவுகள் உள்ளிட்ட பலத்த காயங்கள் ஏற்பட்டதால் மேல் முறையீடு தாக்கல் செய்ய இயலவில்லை. அந்த விபத்தையும் எங்களுக்கு ஏற்பட்ட காயங்களையும் நிரூபிக்க ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எங்களுக்கு விபத்தில் காயங்கள் ஏற்பட்டதாகவும் அதனால் தான் மேல் முறையீடு தாக்கல் செய்ய இயலவில்லை என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. எனது நிரூபண வாக்கு மூலம் பத்தி எண்.9 ல் பிராது தபசில் சொத்திற்கு கொடுக்கப்பட்டு உள்ள அடி அளவுகள் தவறு என்று கூறி விட்டு அதே அளவுகளை மீட்டர் அளவில் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சரி அல்ல. கதவு எண்.40- D ன் நான்கு எல்கைகள் எங்கள் கிரைய ஆவணத்தில்

எவ்வாறு உள்ளது என்று தெரியுமா என்றால் தற்போது நினைவு இல்லை. நிகழ் நிலையில் நான்கு எல்கைகள் என்னால் சொல்ல முடியுமா என்றால் எனக்கு திசைகள் பற்றி எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு வட புறம் என்ன உள்ளது என்றால் ஜெகன் நாதன் லே அவுட் உள்ளது. வீட்டிற்கு மேல் புறம் ஜோசப் அந்தோனியின் வீடு உள்ளது. கிழ புறம் வாதியின் ஒரு பகுதியும் எனக்கு பெயர் தெரியாத ஒருவரின் வீடும், நவமணி முருகேசன் என்பவரின் வீடும் உள்ளது. தென் புறத்தில் தான் தாவா வண்டி பாதை உள்ளது என்றால் சரி தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா. கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.